வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] யாழ்ப்பாணம்:- ஆனந்த ஞு கார்த்திகைமீ உ அ - உ வெள்ளிக்கிழமை (13-12-1974) [இல: குரு

# நாவலர் வாழ்க்கை நம்மவர்க்கு வழிகாட்டி

## நாவலர் குருபூசை விழாவில் சபைத் தலைவர் உரை

"எங்கள் நாட்டில் சென்ற நூற்றாண்டில் அந்நியருடைய ஆட்சியின் கீழ் சைவ சமயமும் தமிழ் மொழியும் இழிந்த நிலையை அடைந்திருந்தன. மக்கள் சைவ சமய முறைப்படி வாழ்க்கை நடத்துவதற்கு இயலாது இருந்தனர். தமிழ் மொழியைக் கற்பதற்கு அவர்களுக்கு ஆர்வம் இல்லை. ஆட்சியாளருடைய மொழியைக் கற்பதற்கு ஆர்வங் கொண்டனர். தமிழ் மொழியைக் கற்பதை நாகரீகம் அற்ற செயலாக எண்ணினர். அவ்வாறான காலத்தில் தமிழ் மொழிக்கும் சைவ சமயத்திற்கும் புத்துயிர் அளிப்பதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் அவதரித்தார்கள். அவர் சமய விசேட தீட்சைகளைப் பெற்று சிவ பூசையை முறையாகப் புரிந்து சைவசமய வாழ்க்கையை நடாத்தி மக்கள் சமய வாழ்க்கையை முறைப்படி நடத்த வழிகாட்டினார். அக்காலத்தில் மாணவர்கள் விபூதி தரித்துக் கொண்டு கிறீஸ்தவ பாடசாலைகளுக்குக் கல்வி கற்கச் செல்ல முடியாது. அதனைத் தடுப்பதற்கு வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற நாமத்துடன் ஒரு பாடசாலையை நிறுவினார். அப்பாடசாலைக்கு தாமே தலைமை ஆசிரியராக இருந்து கல்வி கற்பித்தார். அவரைப் பின்பற்றி அவருடைய தகுதிவாய்ந்த மாணவர்கள் சிலர் சைவ வித்தியாசாலைகளை யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும நிறுவினார்கள். அவர் சிதம்பரத்திலும் ஒரு சைவப் பிரகாச வித்தியாசாலையைத் தாபித்தார். சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் விருத்தி அடையச் செய்வதற்குப் பல நூல்களை எழுதி வெளியிட்டார்.

இக்காலத்தில் சைவசமயத்துக்கு நாவலர் காலத்தில் இருந்த அவலநிலை ஏற்பட்டிருக்கின்றது! நமது அரசாங்கம் ஈழத் திருநாட்டின்கண்ணுள்ள சமயங்களுக்கு சுதந்திரம் அளிப்பதாக அரசியல் சாசனத்தில் ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது நடைமுறையில் வழங்கப்படுவதாகக் காணப்படவில்லை! சிறு பிள்ளைகளுககு அவர்களுடைய சொந்த சமயக் கல்வியுடன் பிறமத போதனையும் புரியப்பட வேண்டுமென நமது அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த நடவடிக்கையை நமது சபை வன்மையாக ஆட்சேபித்துள்ளது. பிறமத போதனை சர்வகலாசாலையில் கல்வி கற்கும் மாணவர்கட்குப் புரியலாம்; ஆனால் சிறு பிள்ளைகள் நமது சொந்தச் சமயக்கல்வியைக் கற்பதற்கு ஆற்றல் இல்லாத பருவத்தில் பிறமத போதனையைப் புகட்டுவது பொருததமற்ற செயலாகும்" இவ்வாறு 5-12-74 வியாழககிழமை யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை ஆதரவில் நடந்த நாவலர் குருபூசை விரிவுரைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த மேற்படி சபைத் தலைவர் திரு. த. சோமசுந்தரம் அவர்கள் கூறினார்கள்.

நாவலர் ஒரு அவதார புருடர் அவருடைய சொல்லும் செயலும ஒற்றுமை உள்ளன. அவருககு தமிழ் நாட்டில் பெரும மதிப்பு இருநதது. யான் திருவாவடுதுறை ஆதீனத்தின் அழைப்பிற்கிணங்கி அங்கு ஒரு மாதர் மகாநாட்டிற்குத் தலைமை வகிககச் சென்றிருந்த காலத்தில் மேற்படி ஆதீனத்தின் அதிபர் மகாசன்னிதானம் அவர்கள் தங்கள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருககு நாவலர் என்ற பட்டம் வழங்கிய செய்தியை நினைவூட்டி நம்மை வரவேற்றார்கள். அந்நிகழ்ச்சியில் இருந்து யாழ்ப்பாண மக்களுக்கு நாவலர் பெருமான் தேடித்தந்த பெருமை புலப்படுகின்றது. நாவலர்பெருமான் மக்களை சைவசமய முறைப்படி வாழவேண்டுமென்று பெரும் விருப்புடையவராக

[ வளர்ச்சி 3-ஆம் பக்கம் ]

---

உ
யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபை
**சைவசித்தாந்தப் பரீட்சைகள் - 1974**

எதிர்வரும் 27, 28, 30 - 12 - 74 ஆகிய நாட்களில் இப்பரீட்சை நடைபெறும். சுட்டிலக்கம் பரீட்சை நிலயம் என்பன 21-12-74க்கு முன் அனுப்பி வைக்கப்பெறும்.

பரீட்சைச் செயலாளர்
11-12-74

---

# சிவஸ்தலங்கள்

(ஸ்ரீ டி. டி. நாணயக்கார, இளைப்பாறிய வித்தியாலயாதிபதி)

ஈழத்திலுள்ள கீர்த்தி வாய்ந்த சிவஸ்தலங்கள் வரலாற்றை சிங்களத்தில் மொழி பெயர்க்க வேண்டுமென்பது இக்கட்டுரையாசிரியரின்விருப்பம். முன்னேஸ்வர வரலாற்றை இக்கட்டுரையாசிரியர் சிங்களத்தில் மொழிபெயர்த்திருக்கின்றார். அதனை அச்சுவாகனம் ஏற்ற பெரியோர்கள் உதவியை நாடுகின்றார்.

ஆ. ர்.

உலகத்திலே முதன் முதலாகத் தோன்றிய சமயம் இந்து சமயமென்று சொன்னால் அதனால் மற்ற சமயங்களுக்கு ஏதாவது குறைவோ அவமானமோ ஏற்பட முடியாது. 1974 வருடங்களுக்கு முன் கிறிஸ்தவமும் 1367 ஆண்டுகளுக்குமுன் இஸ்லாம் சமயமும் தோன்றின வென்பது யாருக்கும் தெரியும். ஆரம்பத்தில் கண்களுக்குப் புலப்படாத இயற்கையை வழிபட்ட மக்கள் இதனையடுத்து தம் குறிக்கோளை அடைவதற்காக, மனதை ஒருமுகப்படுத்துவதற்காக உருவங்களை உருவாக்கி வழிபடத் தொடங்கினார்கள். இவ்வுருவங்களை மரநிழலிலும், கொட்டில்களிலும் பெரிய பாறைகளிலும் மலைக் குகைகளிலும் வைத்து வழிபட்ட மனிதர்கள் காலக்கிரமத்திற் கோயில்கள் அமைத்தார்கள். கருங்கற்களால் வானளாவிய கோபுரங்களைக் கொண்ட பெரிய கோயில்களைக் கட்டினார்கள்.

சமயத்துக்காக மனிதன் பிறக்கவில்லை. மனிதனுக்காகவே தர்ம வழியாக சமயம் பிறந்தது. சித்தார்த்தராகிய புத்த பகவானின் தாய் தந்தையார், மூதாதையர் எல்லோரும் இந்துக்களே. அவரும் 29 வருடங்கள் சைவ சமயத்தின்படி வாழ்ந்தவர். இந்து சமயத்தில் பழக்கவழக்கங்கள் எல்லாம் நன்குத் தெரிந்தவர். இந்து சமய அனுஷ்டான விதிகள் பிறழ்வுற்ற போது புத்தபகவான் மனிதன் ஒழுகவேண்டிய தர்ம விதிகளை வகுத்தார். அவை திரிபிடக வேதமாகும். இந்து மதத்தில் ஆதியில் இருந்த அடிப்படையான கொள்கைகள் காலவர்த்தமானங்களுக்கிணைய மறுமலர்ச்சியடைந்தன. இந்து சமயத்தில் மறுமலர்ச்சியே பௌத்தம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருமதங்களில் ஒற்றுமை இருப்பதற்காக மூற்கூறிய உண்மை உதவுகின்றது; இருமதங்களையும் அறிந்தவர்களுக்கு இது நன்கு விளங்கும்.

சாதாரணமாகச் சிங்களவர்களுக்குப் பௌத்தமும், தமிழாகளுக்கு இந்துசமய

வளர்ச்சி 4-ஆம் பக்கம்

---

# சுத்த அத்துவிதம்: சைவசமயம்

[ "சைவ சித்தாந்த போதகர்" ]

ந + த்வைதம் = அத்வைதம் = அத்துவிதம் ந — என்னும் வடசொல் ஆறு பொருள்படும். அவற்றுள் அன்மை, இன்மை, மறுதலை விசேடம்.

அத்துவிதம் என்பதற்கு இன்மைப் பொருள் கொண்டு உள்பொருள் ஒன்றே என்றார் சங்கரர். அவர் வாதம் அபேதவாதம்; அவர் மதம் கேவலாத்து விதம்.

மறுதலைப் பொருள் கொண்டார் மத்துவர். அநீதி என்றால் நீதியும் உண்டே என இருபொருள் கொண்டார். அவர் வாதம் பேதவாதம். அவர் மதம் துவைதம்.

இன்மைப் பொருள் கொண்ட மற்றொருவர் இராமநுசர். அவர் சொல்லும் பொருளும் போற் பேதாபேதம் என்றார். அவர்வாதம் பேதாபேதம். அவர் மதம் விசிட்டாத்துவிதம்.

அத்துவிதம் என்பதற்கு அன்மைப் பொருள் கொண்டார் மெய்கண்டார், பேதவாதம், அபேதவாதம், பேதாபேத வாதம் மூன்றுமே பொருந்தா; மூன்று தன்மைகளும் தன்னுட் காணப்படும் ஒன்றாய்-வேறாய் - உடனான தன்மையே அத்துவிதம் என்பது சைவசித்தாந்தம்.

"ஈறாய் முதல் ஒன்றாய்..." எனத் தொடங்கும் ஞானசம்பந்தப் பெருமானின் தேவாரம் "....வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம் மிழலையே" என அத்துவித விளககஞ் செய்கின்றது.

( வளர்ச்சி 4-ஆம் பக்கம் )

---

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் விழா

## ஒரு நோக்கு

சைவபரிபாலன சபையார் பெருமான் நாவலர் அவர்களின் குருபூசைத் தினத்தன்று "நாவலர் விரும்பிய சமுதாயம்" என்னுந் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்த மிகவுந்தகைமை வாய்ந்தவர் அம்மையார் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் என யூகித்துத் தெரிந்தமை மிகவும் பொருத்தமானது.

அம்மையார் அவர்களின் வாழ்க்கையை பலரும் அறிவார்கள். அவருடைய தொண்டு கடல்கடந்து நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பாலுஞ் சென்று கொண்டிருக்கின்றது; என்றால் இது தெய்வீகத் தன்மை வாய்ந்தது. என்பதற்கு ஆட்சேபனை இல்லை.

இவருடைய வாழ்க்கையில் இருந்து நமக்குத் தோற்றுவது ஒன்று. அது என்னவெனில் நாவலர் பெருமானின் ஆத்மீக சக்தி, தாம விரும்பிய சமுதாயங் காணவே தமிழும் சைவமும் பாழ் அடைகிறதே என எண்ணுங் காலத்தில் அம்மையார் அவர்களை எல்லாம்வல்ல இறைவன் தோற்றுவித்திருக்கிறார் என்பது.

பெருமான் அவர்கள் வாழ்ந்து காட்டிய மரபிலே அம்மையார் அவர்களின் வாழ்க்கை நடந்து கொண்டு செல்வதை நம் சமுதாயங் காணக்கூடியதாய் இருக்கிறது. விஞ்ஞானம் நிறைந்த காலத்தில் மெய்ஞானம் குறைந்து வருகிறது. பூதக்கண்கள். விஞ்ஞானத்தின் மூலம் மருளும். மெய்ஞான அருளுக்கு வேண்டியது ஞானக்கண் விஞ்ஞான மருள் தோற்றம் மாத்திர முடைத்தது. மெய்ஞான அருள் தோற்றத்திற்கும் அப்பாற்பட்டு தம்தம் அகமுகநாட்டத்தில் உதிப்பது. என்றும் உடைத்தாயது அழிவற்றது விஞ்ஞான மருள் அப்படியன்று. இதை அறியுஞ் சமுதாயம் பிறக்க வேண்டும.

இப்படி நிலையில் தோற்றிய அம்மையார் சிவதொண்டில் ஈடுபட்டு அல்லும் பகலும் தமது வாழ்நாள் முழுவதையுமே சிவயோகமாக நடாத்தி வருவது நாம் அறிந்ததே.

ஆசிரியையாய் வித்தியாதர்மமும், பிரசங்களின் மூலம் சைவத்தையுந் தமிழையும் வளர்த்தலும், ஆலய நிர்வாகத்தால் ஆலய எழுச்சிகளையும் மடங்கட்டி புராணம் படித்தல், திருமுறை ஓதுதலாகிய தொண்டுகளால் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பது, சமய தீட்சை முதலிய கைங்கரியங்களால் ஓர் நற்சமுதாயத்தை உண்டு பண்ணுதலும் முதலாய தொண்டுகள் ஊன் உறக்கமின்றி அம்மையார் அவர்களால் நடாத்தப்படுவதை நாம் அறிவோம்.

அம்மையாரவர்கள் தமது அந்தரங்க சொற்பொழிவின் தற்காலம் நிலவும் வறுமையைக் குறித்து இந்நிலைக்கு நமது சமுதாயமே காரணம் ஏனெனில் தெய்வந் தொழுதல் முதலிய குறிக்கோள்கள் குன்றிய ஓர் அவித்தைவசமான சமுதாயந் தோற்றி தொல் மரவுத் தெய்வீக வாழ்க்கை இன்றி தெய்வ வழிபாடு. தெய்வ நாட்டத்திற்குரிய தொண்டுகள், திருமுறை ஓதல், புராணம் படித்தல், சிறுருக்கு சமய அறிவு ஊட்டல், கற்பித்தல் போன்ற வாழ்க்கை நலம் வாய்ந்த செயல்கள் குன்றுவதை எடுத்துக் காட்டினார்.

நாவலர் பெருமான் அவர்கள் மதுபானமும் மாமிசமும் மெய்ஞான வளர்ச்சிக்குத் தடையானவை என்றும் அவற்றை அகற்றலின் முக்கியத்தையும் எக்காலத்திலுமே எடுத்துக் காட்டத் தவறுவதில்லை என்ற அம்மையார் தற்காலத்தில் இவற்றை அலட்சியஞ் செய்யும் ஓர் போலிச் சமுதாயம் உண்டென்றும் இப்போலிச் செயல்களைப் பெருமான் சைவசமையிகளிடத்தில் கண்டித்தும் மறுசமையிகளிடத்தில் எதிர்த்தும் வாதாடினார் என்றார்கள்.

நமது சமுதாயம் வள்ளலார் அவர்கள் வளர்த்த சமுதாயத்திற்கு முழுமாருகதாமும் தமது பிள்ளைகளையும் மேலும் மேலும் விபரீத வாழ்க்கையில் கொண்டுசெல்வதும் சிறிதேனும் சைவமரபில், ஆத்மீக வாழ்க்கையில், ஞான நெறியில் வழிகோலிக் கொடுக்கிறார்கள். இல்லை என்றும் எடுத்துக் காட்டினார்.

பெருமானின் துணிகரச் செயல்களை எடுத்து விளம்பிய அம்மையார் அவரின் செயல்கள் சமையகுரவர்கள் ஞானசம்பந்தர், நாவுக்கரசர் அவர்களின் செயல்களுக்கு நேரிய தென்றும் "நாம் ஆர்க்குங் குடியல்லோம்...... கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய், யமனை அஞ்சோம், ஏமாப்போம், பணிவோமல்லோம். இன்பமே, துன்பமில்லை" சிவயோகற்கு "அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை" என்னுந் தமது வாழ்க்கையையும் அம்மையார் அவர்கள் சொல்லாமலே எடுத்து இயம்புகின்றார்.

எமது சமுதாயம் இந்நிலைக்கு மாறுங்காலும் எம் வாழ்நாள் வீண்நாளாக, துன்பத்திற்குந் துயரிற்கும் ஆளாய் வாதனையும் வேதனையும், வறுமையுஞ் சிறுமையுமுடைத்தாய் இருக்கு மென்பதை மனதில் பதித்து நல்லோர் சமுதாயத்தை உண்டு பண்ணுவோமாக.

தொகுப்பு:
டாக்டர் என். கனகரத்தினம்
யாழ்ப்பாணம்

x x x

## இந்து மாமன்றம்

யாழ், பெரியபுலம் மெ. மி. த. க. பாடசாலை இந்துமாமன்றம் 6-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை நாவலர் நினைவு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. விழாவிற்கு பண்டிதர் செ. தம்பிஜயா தலைமை வகித்தார். அதிபர் திரு நா, குணரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார். சமய ஒழுக்கநெறியை வளர்த்த நாவலர் பெருமானுக்கு விழா எடுக்கவேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டார்.

நாவலர் திருவுருவப் படத்தை முன்னாள் வித்தியாதிபதி திரு. சிவ. உ. சோமசேகரம் அவர்கள் திரை நீக்கமசெய்துவைத்து ஆசியுரை வழங்கினார்கள். அவர் தமது உரையில் நாவலரின் கொள்கைகளை அநுசரித்து நடக்க முயற்சி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்,

திரு. க. சிவராமலிங்கம் பீ. ஏ. (ஆசிரியர்) "நாவலரின் இருபணிகள்' என்னும் பொருள்பற்றியும் சைவ சைவப்புலவர் திரு: க. சிகுலரத்தினம் 'சமூகப் பணியில் நாவலர்" என்ற பொருள்பற்றியும் "பனையின் உபயோகம்" என்னும் பொருள்பற்றி தொழில் முன்னிலைப்பாட ஆசிரிய ஆலோசகர் திரு. சு. பரநிருபசிங்கமும் விசேட விரிவுரை நிகழ்த்தினர்.

சிவநெறிப் புரவலர் திரு. க. கனகராசா அவர்கள் திருமுறை மனனப் போட்டியிற் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினார், அத்துடன் ஷெ இந்து மாமன்றத்திற்குத் திருநீற்றுப் பையும், திருவாசக நூலும் நாவலர் திருவுருவப் படமும் அளித்து ஆசியுரை வழங்கினார்.

சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் நன்றியுரை கூறினார்.

x x x

## கந்தபுராணம் விரிவுரைப் பூர்த்தி

கொழும்பு அப்பர் அருள் நெறிமன்ற ஆதரவில் "ஆத்ம ஜோதி" ஆசிரியர் திரு, நா. முத்தையா அவர்கள் சென்ற ஆறுமாதங்களாககந்தபுராண உபந்நியாசங்களை நடாத்தி வருகின்றார்கள். 11-12-74 அன்று "வள்ளி திருமணம்" என்னும் பொருள் பற்றிய உபந்நியாசம் நிகழ்ந்தப்பெற்றதுடன் விரிவுரை பூர்த்தியாயது. சைவப்பெரியார்கள் பலர் இவ்விழாவில் பாராட்டுரை வழங்கினர்.

——

வட மாநிலச் சைவ

## இளைஞர் மாமன்றம்

வடமாநில சைவ இளைஞர் மாமன்றத்தினரால் 6-12-74 இரவு 7 மணியளவில் சாந்தையர் மடம் பிள்ளையார் கோவிலில் நாவலர் நினைவு விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 'சிவ நெறிச் செம்மல்', சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில் ஒழுக்க நெறிக்குச் சமயக்கல்வி அவசியம் எனவும் அதனையே நாவலர் பெருமான் பல இடங்களிலும் சுட்டிக்காட்டியுள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

வித்துவான் திரு. எஸ். சின்னத்தம்பி ஆசிரியர் 'நாவலர் பெருமான் என்னும் பொருள் பற்றி உபந்நியாசம் நிகழ்த்தினர்

திரு. கா. இரகுநாதன் அவர்களால் நாவலர் சற்குரு மணிமாலை பாராயணம் செய்யப்பட்டது

[illegible] யும் சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் வெளியிட்டு வைத்தார்.

சமயப் பிரசார நிதிக்காக நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டில் பரிசு பெற்றவர்களுக்கு சட்டத்தரணி திரு. வை. ச. செந்தில்நாதன் அவர்கள் பரிசில்களை வழங்கினார். திரு. மு. க. இரத்தின வேலுப்பிள்ளை அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவெய்தியது.

——

## இராமநாதன் கல்லூரியில்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூசை (கார்த்திகைமகநட்சத்திரத்தன்று) 5-12-74 வியாழக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் அதிபர் திருமதி. இ. அருணாசலம் அவர்கள் தலைமையில் சிறப்பாகக்கொண்டாடப்பெற்றது. நாவலர் பெருமானின் திருவுருவப் படம் மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு மேடையில் அழகாக வைக்கப்பட்டிருந்தது

அவ்வமயம் இலங்கை வானொலியின் முன்னாள் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியும் கொழும்பு விவேகானந்த சபையின் உப தலைவருமாகிய திரு. அருள். தியாகராசா அவர்கள் "நாவலர்பெருமானின் வாழ்க்கையும் போதனையும் பற்றி ஓர் உரை நிகழ்த்தினார்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானுக்கும், சேர். பொன் இராமநாதவள்ளலுக்கு மிருந்த நெருங்கிய தொடர்பை விரிவாக எடுத்துரைத்தார்கள். "நாவலர் பெருமான் கிறிஸ்தவ பாதிரிமாருடைய சேவையை எதிர்க்கவில்லை. சைவ சமயத்தவர்களை மத மாற்றம் செய்ததையே அவர் வன்மையாகக் கண்டித்தார், நாவலர் அவர்கள் போதகாசிரியராயும், பதிப்பாசிரியராயும் ஞானசிரியராயும், உரையாசிரியராயும், வசன கர்த்தாவாயும், சத்தியத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் உறைவிடமாயும் விளங்கினார்" என்று சுட்டிக் காட்டினார்.

திரு. அருள் தியாகராசா மேலும் பேசுகையில் "நாவலர் பெருமானுக்கு 'நாவலர்' பட்டத்தைச் சிவ ராசதானியாய் விளங்கும் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிக் கௌரவித்தது. அதனால் தானும்பெருமையடைந்தது. ஒழுக்கமும், சீலமும் ஆழ்ந்த சைவ சமயப் பற்றும், கல்வி கேள்வி ஞானங்களில் சிறந்து விளங்கும் மேதாவிகளுக்கே சிவ நெறியைத் தமது கண்மணிபோல் காத்து வரும் திருவாவடுதுறை ஆதீனம் பட்டம் வழங்கும் மரபினைப் பேணிக்காத்து வருகின்றது" என்றும் மேலும் கூறினார்.

நாவலர் சிவபத மடைந்து தொண்ணூறு ஆண்டுகளுக்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை நாவலர் பெருமானுக்கு நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு அருகாமையில் வெண்கலத்தினால் ஓர் உருவச் சிலையை நிறுவியிருக்கின்றது. இது நாவலர் பெருமானின் ஆத்ம சக்தியைக் காட்டுகின்றது. ஆறுமுகநாவலர் பெருமானின்குருபூசைத்தினத்தை இனி வருங் காலங்களில் ஒவ்வோராண்டும் சிறந்தமுறையில் கொண்டாட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். நன்றியுரையுடன் குருபூசை விழா இனிது நிறைவெய்தியது.

——

## விஞ்ஞான ஆசிரியர் சங்கம்

வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் 21வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 9-11-74 ல் நடைபெற்றது அன்று காலை கொழும்பு வளாகம், விலங்கியற் பேராசிரியர் கலாநிதி K. D. அருட்பிரகாசம் அவர்கள் "விஞ்ஞானம் கற்பித்தலில் தற்காலப் பிரச்சனைகள் பற்றிய சில சிந்தனைகள்" என்னும் பொருள் பற்றி ஓர் சிறந்த சொற்பொழிவு ஆற்றினார்கள். அதில் அவர் சர்வகலாசாலை பிரவேச பரீட்சையில் தரப்படுத்துதல் செய்யப்படும் முறையை நன்கு விளக்கினார்கள்.

பின்னர் நடைபெற்ற ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் 1974-75 புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. M. பத்மநாதன் அதிபர் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் உப தலைவர்கள் திரு. S. T. சாறி திரு க சண்முகநாதன் திரு. இராஜசேனன் செயலாளர்: திரு, வை. இரகுநாமுதலியார் உப செயலாளர்: திரு. வே. நடேசபிள்ளை பொருளாளர்: திரு. C. S. சுப்பிரமணியம் நூலகப் பொறுப்பாளர்: திரு. S. பன்னீர்ச்செல்வம் உதவி நூலகப் பொறுப்பாளர்: திரு. பேர்டினன்ட்.

நிருவாகசபை உறுப்பினர்கள் பின்வருமாறு: திரு. அ. கதிர்காமர், திரு. சே. சிவராசா, திரு. த புத்திரசிங்கம், திரு. S. கேசவராஜன், திரு. T. நாகரத்தினம், திரு. கொன்ஸ்ரன்ரைன், செல்விகள்: M C. பிரான்சிஸ், தியாகராசா.

——

## த. ஆ. சங்கம் கோப்பாய்

"ஆசிரியர்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்கவும், அவ்வுரிமைகளை வென்றெடுக்கவும் ஆசிரியர் சங்கங்களில அங்கத்துவம் பெறுவது அவசியமானது. இவர்களது சேவை மனப்பான்மையை அரசு நன்கு விருப்புடன் வரவேற்கின்றது. ஆகவே மாணவ சமூதாயம் நன்கு முன்னேற ஆசிரியர்கள் அயராது உழைக்க வேண்டியது அவசியமாகும். அத்தோடு ஆசிரியர்கள் தமது குறைகளை எயக்குத் தெரிவித்தால் ஆராய்ந்து அவை பொருட்டு வேண்டியன செய்யப்படும்".

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கோப்பாய் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். கல்வி அதிகாரி திரு. எஸ். இராசா மேற்கண்டவாறு கூறிப்பிட்டார்.

மேற்படி சபையின் கூட்டம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் ஷெ சபையின் தலைவர் திரு அ. பஞ்சாட்சரம் அவர்கள் தலைமையில நடைபெற்றது. திரு. நா. இராசநாயகம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

இ. த. ஆ. சங்க பொதுச் செயலாளர் திரு. ந பாலசுப்பிரமணியம் யாழ். மாவட்டச் செயலரளர் திரு. தி. நடராசா, பொதுப் பொருளாளர் திரு. நா. நடராசா,

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிவத்தொண்டன்

... திரு. ஏ. திருநீலகண்டன் ...

**இந்த ஆண்டு ஆரம்பத்தில்தான் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பின் வரும் வேண்டுகோளைச் சைவ உலகுக்கு விடுத்தார்:—**

''வித்துவான் அவர்கள் நம் மத்தியிலிருப்பது கிடைத்தற்கரிய தொரு பாக்கியம். சைவத்தாபனங்கள் ஆங்காங்கு தேவார வகுப்புக்களை வைத்து வித்வான் அவர்களைப் பயன்படுத்தலாம். பாடும்போது ஒலிப்பதிவுசெய்தும் பயன்படுத்தலாம்: கலியின் கொடுமையைத் தணிப்பதற்கு இது நல்வழி. தமிழ் இலக்கண இலக்கியம், சமயம், ஆங்கிலம், தர்க்கம் என்றின்னோரன்ன விஸ்தாரமான கல்வியறிவுடையவர்கள் அவர்கள். பத்துப் பிரசங்கங்களை ஆயத்தஞ் செய்வார்களானால் தமிழ் வழங்கும் நிலமெங்கும் பிரசங்க மாரி பொழிந்து உபந்நியாசச் சக்கரவர்த்தியாய்ப் புகழ் உலகில் நீந்தலாம்''.

ஆனால் கலியின் கொடுமை தணியக்கூடாதுஎன்பது தெய்வ சித்தம் போலும்.

திரு கார்த்திகேசு அவர்கள் கரணவாயிற் பிறந்து ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிற் படித்தவர். பின்னர் அண்ணாமலை சர்வகலாசாலையிற் சேர்ந்து வித்துவான் பட்டமும் இலங்கைச் சர்வகலாசாலையிற் பயின்று கல்வி டிப்புளோமாப் பட்டமும் பெற்றவர். இடையில இலண்டன் சர்வகலாசாலையிலிருந்து பி. ஏ. பட்டமும் பெற்றவர்.

அண்ணாமலையில் விபுலானந்த அடிகள், சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்ற அக்காலப் பேரறிஞர்களிடம் முறையாகப்பாடங்கேட்டவர். இலக்கணப்புலி கந்தசாமியாரிடம குரு சிஷ்ப முறையிற் பழகி தமிழ இலக்கண நுட்பங்களைப் படிக்கும் வாய்ப்பும அவருக்குக் கிடைத்தது. ஆங்கிலச் சொன் வன்மைக்காக மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் அவர்களிடமிருந்து அடுத்தடுத்துப் பரிசில்கள் பெற்றவர்.

தமிழ்ப்படிப்பை முடித்துக் கொண்டு பரமேஸ்வர பண்டித, பயிற்சிக்கலாசாலையில் டொகரர் சிவப்பிரகாசம நவநீத கிருஷ்ண பாரதியார் போன்ற பேரறிஞர்களுடன் உடனுசிரியராகக் கடமையாற்றி முன்னொரு போதும் ஈழங்கண்டிராத ஒரு புதுமையை - நூற்றுக்கணக்கான தமிழ்ப் பண்டிதர்களை ஒரு சில ஆண்டுகளில் தோற்றுவிக்கும் ஒரு ''ரெக்கோட்டை'' - சாதிப்பதற்கு உதவியாயிருந்தார்.

துர்அதிர்ஷ்டவசமாகப் பண்டித கலாசாலை மூடப்பட்டதும் வித்துவான் அவர்கள் ஆங்கிலக் கல்லூரிகளில் கடமையேற்றுப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து அஞ்ஞாத வாசம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. என்றாலும் இந்தக் காலத்தில தான் சித்தாந்தசாஸ்திர நூல்களையும் திருமுறைகளையும் ஆழமாகப் படிக்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்ததெனலாம்

மூன்று ஆண்டுகளுக்கு முன் ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறியதும் அவர்களது மனத்துக்கிசைந்த சைவப்பணியில் பூரணமாக ஈடுபடும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது.

சிவதொண்டன் நிலையத்தில் பெரிய புராணத்திற்குப் பொருள் கூறுவது, வேதாந்த மடத்தில் திருவாசக வகுப்பையும் சைவ பரிபாலன சபையின் ஆதரவிலும் ஞானசம்பந்தர் ஆதீனத்திலும் சித்தாந்த வகுப்புக்களையும் நடத்துவது, இடையில் திருவாவடுதுறை ஆதீனத்தின் அழைப்பை ஏற்றுத் திருவிடைமருதூர்த் திருமுறைவிழாவில் அப்பர் சுவாமிகளைப் பற்றி உரையாற்றியது, சிவதொண்டனுக்குக் கட்டுரைகள் வழங்குவது, இலங்கை வானொலியில் உரை நிகழ்த்துவது, தம்மை அவ்வப்போது அணுகும் நண்பர்களின் சித்தாந்த ஐயங்களை நீக்குவது - இப்படிப் பலவாறாகத் தமது காலத்தைப் பயனபடுத்தினர்.

நம் மத்தியில் மதிப்பிற்குரிய பல தமிழறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களிற் சிலர் ஒவ்வோர் துறையில் வித்துவானிலும் சிறந்தவர்களாயிருக்கக்கூடும். ஆனல் வித்துவான் அவர்களின் சிறப்பு ஒரு தனித்தன்மை வாய்ந்ததாக அமைந்திருந்தது. அவர் கூரிய மதி நுட்பம வாயந்தவர். அவருடைய விஸ்தாரமான கல்வியறிவைப் பண்டிதமணி யவர்கள் குறிப்பிட்டிருப்பதை மேலே கண்டோம். அவருடைய ஆழ்ந்த ஆங்கிலப் புலமை தமிழ் இலக்கியங்களை ஒரு புதுக்கோணத்திலிருந்து நோக்க உதவியது. தாம் கசடறக் கற்றிருந்த தர்க்கத்தையும் இலக்கணத்தையும் வீண் விதண்டாவாதங்கள் வீசி எறியாமல், வெதுலாகவமாகக் கையாண்டு சித்தாந்தச் சிக்கல்களை ஊடுருவிச் சென்று அவற்றின் உண்மைப் பொருளைக் காண்பதற்குப் பயன்படுத்தினார். சைவாசார அனுஷ்டானங்களிற் பிறழாத அவருடைய அகத்தில் ஒரு தெளிவையும் முகத்தில் ஒரு பொலிவையும் காணக்கூடியதாகவிருந்தது. அவப்பொழுது போக்காது பொருளுணர்ந்து இன்னிசையுடன் திருமுறைகளை ஓதுவது அவருடைய தவப்பொழுது போககாக விருந்து வந்தது. இளம் பராயத்தில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து தினமும அவர் அனுபவித்த தில்லை நடராசனின் ஆனந்தத் தாண்டவம் அவர் மனத்தைவிட்டு என்றுமே அகன்றதில்லை. நடமாடுந் தெய்வமாக நம்மத்தியில் காட்சியளித்த யோகர் சுவாமிகளின் அருட்கண்காணிப்பு அவருடைய வாழக்கை முழுவதையும் நெறிப்படுத்திவந்த தென்பதை ஒரு சிலரே அறிவர்.

வித்துவான் அவர்கள் நடாத்திய சித்தாந்த வகுப்புகளிற் கலந்துகொண்டவர்கள் அவர்களின பல திறப்பட்ட இத் தனிச் சிறப்பை ஒவ்வொரு நிமிடமுங் காணககூடியதாக விருந்தது.

தொடக்கத்தில் தமிழ்த்தொண்டாக மலர்ந்து நறுமணம்பரப்பிய அவர்களது வாழ்க்கை இறுதியிற் சிவ தொண்டாகக் கனிந்து இன்சுவை நல்கிக் கொண்டிருந்தது. ஆனல் தெவிட்டாத அவ்வின் சுவையை இன்னுஞ்சில காலத்துக்காவது அனுபவிக்கச் சைவ உலகு கொடுத்துவைக்க வில்லையே என்று நாம் வருந்தாமலிருக்கமுடியாது. ஆனல் பழுத்த மனத்தடியார் நம்முடன் நெடுகிலும் இருக்க முடியுமா என்று நமது அறிவு தலையிட்டு எம்மைத் தேற்றுகிறது.

# நாவலர் பிள்ளைத்தமிழ்

[ எட்டாவது : சிற்றிற் பருவம். ]

**ஆக்கம் : — ''பழைய பாணி'' —**

( முன் வளர்ச்சி — 63 )

பொங்கும் அடியா ரலைந்தெழப்பொன்
பொலியும் வேற்கைப் புங்கவன்தேர்ப்
புனிதப் பவனி யெழுந்தருளப்
**புவியும் விண்ணுந் திசையு [மொக்கத்**
**தங்கம் பொலியுந் தனிமகிமைத்**
தலமார் நல்லைப் பதிக்கரசே
தத்துஞ் செவ்விக் குறுநடையின்
தனிப் பேரழகு தலஞ்சுவைக்க
எங்குந் திரிந்தே விளையாடி
எம்மோ ரனையோர் சிற்றிலழித்
தியலும் நினது பரிசறிவோம்
ஏதும் பயமில் விளங்குருளைச்
சிங்கம் நின்னைப் பணிந்திரந்தோம்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தெய்வத் திருவார் சிவகாமி
செல்வா சிற்றில் சிதையேலே. (2)

---

உ

விநாயகபுரத்து மூழங்காவில்

## கணபதி துதியும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நினைவாஞ்சலியும்.

வெண்பா

செல்வத் திருவுஞ் செழுங்கலையாயும் புலமை
மல்கத் தனது வரமுதவும் — செல்வச்
சித்திவிநா யகமூலத் தேவை முழங்காவிலிலே
நித்தமுநீங் காதே நினை !

அறுசீராசிரிய விருத்தம்.

உலகமெலா மொருமனதா யிறையொருவ னெனஉணரு முண்மை தேரப்
பல பலவாங் நிலப்பாங்காய் மொழிப் பாங்காற் பலநிறத்து வடிவேற் றாலும்
கலகமற நல்லைநக ராறுமுக நாவலனுர் காட்டுநெறிக் கருவூலங்கள்
விலகாத வகைவளர்ந்து மேன்மைதர மென்மேலும் விரும்பி நோற்பாம்!

---

**நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானவர்கள் அவரது ஆப்த நண்பராகிய நீர்வேலி வடக்கு கம்மிய குலதிலகர் வி. ஆறுமுகாசாரியாருக்கு அனுப்பிய பாராட்டு ஓலைச் சுருளிலிருந்து எடுத்தவை.**

வெண்பா.

வடநீர்வை வாசன் மாமலராள் நேசன்
அடலே றெனத் தருக்க ஆசான் — திடமான
ஆறுமு என்பேர னுய்க்கலைக ளாய்கின்ற
வீறுமிகப் பெற்றுயர்ந்தான் மேல். (1)

குடமுனியை நேருமொரு கொல்லர் குலக்கோமானுய்
வடநீர்வை வாழ்வாய் வரையுமென்பே — ருடையவனுய்
சங்கீதஞ் சிற்பந் தருக்கமுட னைந்தொழிலிற்
சங்கேத விற்பனனுந் தான்! (2)

---

**வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.**

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில், 13—12—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிரதம ஆசிரியர் : திரு, நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர் : திரு. மூ. மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர்வாழ்க்கை

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

இருந்தார் மக்கள் எவ்வித உணவை அருந்துகின்றனரோ அந்த உணவின் பயனுக அவர்களுடைய குணம், அமையும் தாவர போசனத்தை அருந்தினல் மக்களுக்குச் சாத்துவீக குணம் ஏற்படும் புலாலுணவை அருந்தினல் மக்களுக்கு தாமத குணம் ஏற்படும். அதனல் மக்கள் அரக்கர்களைப் போல் வாழ்கிறார்கள். ஆகையில் மக்கள் தாவர உணவையே அருந்தவேண்டு மென்று நாவலர் பெருமான் வற்புறுத்தினர். மது அருந்தலையும் அவர் வன்மைமாகக் கண்டித்தார். ஆகையினல் இக்கால மக்கள் தெய்வீகத் தன்மையுடன் வாழ்வதற்கு இக்காலமதில் மதுபானத்தையும் புலாலுண்ணுதலையும் நீக்குதல் வேண்டும்.

ஒரு பாடசாலையில் 10 ம் வகுப்பில் படிக்கும் மாணவன் சைவ சமய பாடப் பரீட்சையில் மிகத் திறமையாக சித்தியெய்தினன். ஆனல் அவன் சைவசமய வாழ்க்கையை பின்பற்றவில்லை. இத்தகைய சமயக் கல்வியினல் எவருக்கும் ஒரு பலனுமில்லை. மாணவர்கள் சைவசமய முறைப்படி வாழ்க்கை நடத்தினுற்ருன் அவர்களுக்கு சமயக் கல்வியினுற் பயனுண்டு. நாவலர் பெருமான் போதித்த சமய முறைப்படி கல்வி போதனை நடத்தல் வேண்டும்; இவ்வாறு செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் உரையாற்றினர்கள்.

வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி பவானி சுப்பிரமணியமும் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் சி. இராஜேந்திரனும் நாவலர் பெருமானைப் பற்றி சிற்றுரைகள் வழங்கினர்கள்.

அன்று முற்பகல் சிவபூஜா மண்டபத்தில் சைவப் பெரியார் திரு. சி. தம்பிஐயா அவர்கள் நாவல மண்டபத்தில் நடராஜப் பெருமானுக்கு பூசை புரிந்து தமிழ்மறையோதி நாவலர் சற்குருமணிமாலை என்னும் நூலின் சில செய்யுட்களை ஓதினர்கள். சைவப் புலவர் க. சிற்றம்பலம் அவர்கள் யாவருக்கும் நன்றி கூறினர்.

——

## த. ஆ. சங்கம்

2-ஆம் பக்கத்து வளர்ச்சி

யாழ் மாவட்ட உபதலைவர் திரு. த. இராசேந்திரம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். செயலாளர் திரு. க. கணபதிப்பிள்ளை நன்றி தெரிவித்தார்.

புதுவருட உத்தியோகத்தர் வருமாறு:-

தலைவர்: திரு. அ. பஞ்சாட்சரம்
செயலாளர்: திரு. சி. சிவானந்தம்
பொருளாளர்: திரு த. மயில்வாகனம்

பன்னிரண்டு பேர்களைக் கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப்பெற்றது.

——

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்தஹு கார்த்திகைமீ உஅ௨ வெள்ளி

## திருவெம்பாவை வழிபாடு

சைவ மக்கள் சிவபெருமானுடைய திருவருளைப் பெறுதற்கு உகந்த காலம் திருவெம்பாவைக் காலமாகும். மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் தங்கிய காலத்தில் கன்னிப் பெண்கள் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று தங்களைப்போன்ற பெண்களை அழைத்து திருக்குளங்களில் நீராடச் சென்றதைக் கவனித்து அவர் திருவெம்பாவை என்னும் அற்புதப் பதிகத்தைப் பாடினர். "வீணே காலத்தைப் போக்காதே!, இன்னும் துயிலுதியோ!, சிவபெருமானுடைய திருவருள்போன்ற நீரில் மூழ்கிப் புனிதமடைந்து அவரை வழிபட்டு நற்கதி யடைவாயாக" என்ற கருத்தமைந்த பாடல்களைத் திருவாய் மலர்ந்துள்ளார். சைவ மக்கள் சூரியோதயத்துக்கு முன் நீராடி சந்தியா வந்தனம், பஞ்சாட்சர செபம் முதலிய கடமைகளைப் புரிந்து ஆலயங்களில் திருவெம்பாவைப் பதிகத்தைப் பக்தி சிரத்தையுடன் ஓதுதல் வேண்டும். ஆலயங்களிலும் மடாலயங்களிலும் திருவாதவூரடிகள் புராண படனம் நிகழ்த்துதல் வேண்டும். கசட்டுரைகளைப் பேசாது இறைவன் புகழைப் பாடுதல் வேண்டும் சிவபெருமானுடைய திருவடிகளை மறவாது இன்பமாக வாழ்க்கையை நடத்தத் திருவெம்பாவைக் காலம் உகந்த ஒன்ருகும்.

## சுத்த அத்துவிதம்: சைவ சமயம்

(1ஆம் பக்க வளர்ச்சி)

எண்ணுப் பொருளில் அகரம் அன்மைப் பொருளிலேயே வரும் என்பது வடமொழி இலக்கண நூல் வல்லார் முடிபு.

உதாரணம்: அ + ஏகம் = அநேகம்.

இறைவனுக்கும் நமக்குமுள்ள தொடர்பு அத்துவிதம் என்பது வேத வழி வந்த 'இந்து' சமயங்கள் யாவற்றின் அடிப்படைக் கொள்கை. வேதத்தின் அந்தம் வேதாந்தம். உபநிடதங்கள் = வேதாந்தம். வேதாந்தசூத்திரம்: பிரமசூத்திரம், பிரமசூத்திரமும் மற்றும் உபநிடதங்களும் பிறவும் தத்தம அத்துவிதக் கொள்கையையே விளக்குகின்றன என சங்கரர், இராமானுஜர், மத்துவர் முதலியோர் தனித்தனி உரைகண்டனர். இதனல் முப்பொருளை வலியுறுத்தும் சைவசமய சாத்திர, தோத்திரக் கோட்பாடுகளை விளக்கும் மெய்கண்ட சாத்திரங்கள் எழுந்தன.

இறை — உயிர் அத்துவிதத் தொடர்பு
பொன் — பணி போல் அபேதம் என்ருர் சங்கரர்;
இருள் — ஒளி போல் பேதம் என்ருர் மத்துவர்;
சொல் — பொருள் போல் பேதாபேதம் என்ருர்
இராமாநுசர்.

(அ) உடல் — உயிர் (ஆ) கண் — அருக்கன் (இ) அறிவு — ஒளி போல் முறையே (அ) கலப்பினுல் ஒன்ருய் (ஆ) பொருட்டன்மையினுல் வேருய் (இ) கணணொளியும் உயிர் அறிவும் போல் உடனுமாய்ப் பிரிப்பின்றி நிற்கும் நிலேயே அத்துவிதம் என்பது சைவசித்தாந்தம் இதுவே சுத்த அத்து விதம்; வேதாந்தத் தெளிவு.

சங்கரர், மத்துவர், இராமாநுசர் கொண்ட "அத்வைதங்கள்" நம் சைவசமய குரவர்களால் விலக்கப்பட்டவை; மாருனவை; வேருனவை.

வேதம், ஆகமம், உபநிடதம், புராணம், சாத்திரம் தோத்திரம் யாவும் சுத்தாத்துவிதமானவை, சிவபரமானவை என்பதே சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கை,

திருஞானசம்பந்தர் முதலிய சமய குரவர்கள் மெய்கண்டார் முதலிய சந்தான குரவர்கள், திராவிட மாபாடிய கர்த்தராகிய சிவஞான முனிவர், நாம் உய்ய அவதரித்த நாவலர் பெருமான் முதலியோரால் கண்ணேபோற் போற்றப்பட்ட அத்துவிதம் சிவபரமான சுத்தாத்துவிதமே. அதன் முழுமுதற் கடவுள் சிவபெருமான்.

"பொய்கண்டார் காணுப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட நாதனருள் மேவு நாள் எந்நாளோ?" என்பது தாயுமானவர் திருவாக்கு. சிவபரங் கூறும் ஒரே அத்துவிதம் புனித அத்துவிதமே.

# தில்லையில் நாவலர் பெருவிழா

## சிவஸ் தலங்கள்

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

மும் உரியது என நம்பிக்கை உண்டு. இரு இனங்களுக்கிடையே இருக்கிற நெருங்கிய தொடர்பு இரு சமயங்களிலும் இருக்கிறது. இத்தொடர்பு இரு சாதிகளிடையே ஒற்றுமை வளர்வதற்குத் துணையாக இருக்க வேண்டும்.

இந்து சமயத்தில் வர்ணிக்கப்படும் பல தெய்வங்களைப் பற்றிய நம்பிக்கை பௌத்தர்களுக்கும் இருப்பது இரகசியமல்ல. ஸ்கந்தா, விட்டுணுபோன்ற தெய்வங்களுக்கு வழிபாடு செய்கிற சிங்கள பௌத்தர்கள் அநேகர் இருக்கிருர்கள். இது மகிழ்ச்சிக்குரிய காரணம்.

இந்துசமய ஆலயங்களின் வரலாற்றைத் தெரியாமலே நம்பிக்கை வைத்திருக்கிற இவர்களுக்காக இந்து ஆலயங்களுடைய புராணங்கள் சிங்கள மொழியில் வெளிவந்தால் இரு சாதிகளின் ஒருமைப்பாட்டுக்கு அது உதவியாகுமென நம்பிக்கை எனக்குண்டு

முன்னேஸ்வரம் (முனீஸ்வரம்) நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், ஈழத்துச் சிதம்பரம் (காரை சிவன் கோயில்) போன்ற முக்கியமான ஸ்தலங்களின் வரலாற்றை சிங்களத்தில் எழுதி வெளியிட்டால், ஆண்டு தோறும் திருவிழாக் காலங்களில் இந்துக் கோயில்களுக்குப் போகிற ஆயிரக்கணக்கான சிங்களவர்கள் அப்படிப்பட்ட வரலாற்றுப் புத்தகங்களை வாங்கி வாசிப்பார்கள். சிங்களத்தில் இப்படிப்பட்ட புத்தகங்கள் ஒன்றுமே இல்லை. இருநதால் அந்தந்த திருவிழாக் காலங்களில் விசேட பிரசாரங்களும் செய்யலாம்.

ஒரு சமயத்தில் சேர்ந்தவர் மற்றொரு சமயத்துக்கு மாற்றுவதற்காக அநியாய முறைகளில் முயற்சி செய்வது மகாபாவம். எல்லா சமயங்களும் இருக்க வேண்டும். வெவ்வேறு சமயங்களில் சேர்ந்தவர்கள் மற்ற சமயங்களை அறிந்து கொண்டால், அதன்பயனுக ஏற்படும் நன்மைகள் பல உள. இந்த அருமந்த நோக்கத்துடன் சமய பிரசாரங்கள் செய்ய வேண்டும்.

இத்தொண்டில் ஈடுபட விரும்பிய செல்வந்தர்களோ அல்லது இந்துசமய கூட்டங்களோ இருந்தால் என்னேடு தொடாபு செய்யுங்கள். முன்னேஸ்வர வரலாறு என்ற நூலைச் சிங்களத்தில் மொழிபெயர்த்திருக்கின்றேன். மற்ற ஆலயங்களைப் பற்றியும் எழுதலாம் முன்னேஸ்வரத்தில் அடுத்த வருடாந்த திருவிழாவுக்குமுன் இப்புத்தகம் அச்சிடுவதற்கு மூலதனம் விடுவதற்கு விரும்பியவர்கள். டி. டி. நாணயக்கார, 86 தந்திரிமுல்ல, பாணந்துறை என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளும்படி தயவுடன் கேட்டுகொள்கின்றேன், வணக்கம்.

## முதற் பதிப்பு நூற் சுவடிகள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன

[நமது சிறப்பு நிருபர் திரு: மா. பாலசுப்பிரமணியன் சிதம்பரம்]

தில்லையம்பதியிலும், யாழ்ப்பாணத்திலும், சைவப்பிரகாச வித்தியாசாலையையும, சென்னை நகரில் வித்தியாநுபாலன யந்திரசாலையையும் நிறுவிய, யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களின் 95 ஆவது ஆண்டு குருபூஜைத்திருநாள் கார்த்திகைத் திங்கள் 20 ஆம் நாள் தில்லையம்பதியிலுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் வித்தியாசாலையில் சிறப்பாக நடைபெற்றது.

காலையில் ஸ்ரீ சேக்கிழார் கோயிலில், அர்ச்சகர் திரு திருஞானசம்பந்த தேசிகர் அவர்களால் ஸ்ரீ விநாயக பெருமானுக்கு அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்று வழிபாடுகள் நடைபெற்றதும், நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை அலங்கரிக்கப்பட்டு முதற்பதிப்பு நூற்சுவடிகளுடன் நற்பொறுப்பாளர் திரு. தி. க. இராசேசுவரன் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் சூழ மங்கள வாத்தியங்களுடனும், வாணவெடிகளுடனும், வீதிவலம் புறப்பட்டு வித்தியாசாலையை வந்து அடைந்தார்கள்.

நாவலர் பெருமானுக்கு "சற்குருமணிமாலை" பாடல்கள் ஓத ஒவ்வொரு பாடலும் ஓதியவுடன் திரு. திருஞானசம்பந்த தேசிகர் அவர்கள் கற்பூர ஆராதனைகள் செய்து எல்லோருக்கும் பிரசாதங்கள் வழங்கினர்.

நற்பொறுப்பாளர் திரு, இராசேசுவரன் அவர்கள் வழக்கம்போல் ஆயிரத்துக்கு மேற்பட்டுள்ள மாணவ - மாணவிகள், ஆசிரியர்கள், பெற்ருேர்களுக்கு மலை வாழைப் பழமும், பூந்தி இனிப்பு பொட்டலமும் வழங்கியபின், ஸ்ரீ நடராஜப் பெருமான் சந்நிதியில் காலை 11 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் அன்னப்பாவாடையும் நடத்தி வைத்து வழிபாடுகள் நடைபெற்றன.

பொது தீஷிதர்கள் அனைவருக்கும் பாவாடை அன்னம் வழங்கப்பெற்றது.

வித்தியாசாலையில் பகலில் மாகேசுவர பூசையும் நடைபெறன. (வளரும்)

### தில்லையம் பதியில் வரவேற்பு

தில்லையம்பதி ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் பொது தீக்ஷிதர்கள சார்பில் "இந்து சாதனம்" பிரதம ஆசிரியர் உயர்திரு. நம. சிவப்பிரகாசம் (வழக்கறிஞர்) அவர்களுக்கு கார்த்திகைத் திங்கள் 21ஆம் நாள் காலை ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்மை சமேத ஸ்ரீ நடராஜ பெருமானுக்கு அர்ச்சனை ஆராதனைகள் செய்து பிரசாதங்கள் வழக்கி புஷ்பமாலை அணிவித்து கௌரவிப்பு அளித்தார்கள்.

## அடைவு நகை ஏலவிற்பனவு

அரசாங்க உத்தரவுடன் ஊர்காவற்றுறை கரம்பனில் அடைவு பிடிக்கும் திருமதி சிவகலை கனகரேத்தினம் அவர்களின் அடைவு கடையில் 1971ம் ஹு கார்த்கை மீ 16ம் திகதி தொடக்கம 1972 ம் ஹு மார்கழி மீ 31ம திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னுல் 1975ம் ஹு தை மீ 30 திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் ஷெ அடைவுகடையிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வை. ஏரம்பமூர்த்தி
ஏலவிற்பனையாளர்
Autcroneer

துறைமுகம்
காரைநகர் 9-12-74

## பெருமானைக் கண்டனைய பேறு!

— "இறை—ஒளி" —

தில்லை நட்ராசர் க்ஷேத்திரத்தில் வல்லவராம்
நல்லை நகர்நா வலனர்பேர் — சொல்லும்
குருபூசை கண்கள் கொளாக்காட்சி காணல்
பெருமானைக் கண்டனைய பேறு. [51]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org